Rouge Valley HEALTH SYSTEM

The Scarborough Hospital

## செய்தி வெளியீடு

**வைத்தியசாலைகள் இணையும் விருப்புக்கான அறிவித்தலை முன்வைக்கின்றன**

ஜனவரி 27, 2014 - றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பும் (RVHS) ஸ்காபரோ வைத்தியசாலையும்(TSH), இணைந்து செயற்படும் விருப்பத்தை மையக் கிழக்கு உள்ளக சுகாதார ஒருங்கிணைப்பு வலையாக்கத்துக்கு (Central East LHIN) முறையாக அறிவித்துள்ளன.

இணைவதற்கான முறையான அறிவித்தல் உள்ளக சுகாதார சேவைத்திட்ட ஒருங்கிணைப்புச் சட்டப்படி வெள்ளிக்கிழமை முன்வைக்கப்பட்டுள்ளது என RVHS, TSH ஆகிய இரு வைத்தியசாலைகளினதும் சபைத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். வைத்தியசாலைகளின் இயக்குநர் சபைகள் 2013 நவம்பரில் கொள்கை அளவில் முன்மொழியப்பட்ட இணையும் முயற்சியை அங்கீகரித்ததைத் தொடர்ந்து இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

'இந்த அறிவித்தல் இரு வைத்தியசாலைகளையும் இணைக்கும் எமது தொடர்ச்சியான முயற்சியில் ஒரு மைல் கல்லாகும். இணைவதற்கு இரு வைத்தியசாலைகளும் காட்டிவந்த அர்ப்பணிப்பை இது மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. இவ்விணைவு சுகாதாரம் பேணுவதை விருத்திசெய்வதையும் நோயாளியின் நலத்துக்கு முதன்மை அளிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டது' என்று TSH சபைத் தலைவர் ஸ்ரிவின் சிமித் அவர்கள் தெரிவித்தார்..

'இந்த இணைப்புக்கான பிரேரணை எமது மேற்கு றூறாம் மற்றும் ஸ்காபரோ சமூகத்தவருக்கு சிறப்பான சுகாதார வசதிகளைப் பெறத்தக்க வலுவான வாய்ப்பினை வழங்குகின்றது. மேலும் வைத்தியர்களைக் கவரவும் குறைந்த செலவில் நிறைந்த சேவையை வழங்கவும் இத்திட்டம் வழிவகுக்கும் என்றும் நாம் நம்புகின்றோம்' என்று RVHS சபைத் தலைவர் யோன் வைட்மான் தெரிவித்தார்.

இவ்விரு வைத்தியசாலைகளினதும் இணைப்பு அலுவல்களைக் கவனிக்க ஒரு மாற்றுநிலைக் கூட்டுக் குழுவை அமைப்பதுபற்றி RVHS மற்றும் TSH வைத்தியசாலைச் சபைத் தலைவர்கள் இம்மாதத் தொடக்கத்தில் அறிவித்திருந்தார்கள். இவர்களின் இணைத் தலைமையில் இயங்கும் இந்த மாற்றுநிலைக் கூட்டுக் குழுவில் இரு வைத்தியசாலைகளினதும் இயக்குநர் சபை உறுப்பினர்கள், அவற்றின் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், மருத்துவத் தலைவர்கள், இரு வைத்திய சாலைகளினதும் மருத்தவ உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுடன் மையக் கிழக்கு LHIN பிரதான நிறைவேற்று அதிகாரியும் வாக்களிக்கும் உரிமையற்ற உறுப்பினராக இருப்பார்.

மேலும் இரு வைத்தியசாலைகளும் முதலீட்டுக்கு முன்னதான திட்டம்

ஒன்றிற்கு விண்ணப்பித்திருக்கின்றன. இது மைய கிழக்கு LHIN இயக்குநர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்த விண்ணப்பம் தேவையான நிதியுதவியைப் பெறும்பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஸ்காபரோவுக்கும் மேற்கு டுறாம் பகுதிக்கும்(ஏஜாக்ஸ், பிக்கரிங், விற்பி) உகந்த கட்டிடங்களைத் திட்டமிடவும் நிர்மாணிக்கவும் பயன்படுத்தப்படும்.

தற்போதுள்ள இணைப்பு நடவடிக்கைக் கட்டம் அடுத்த 60-90 நாட்களுக் கிடையில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்நாட்களில் இரு வைத்தியசாலைகளினதும் சபைகள் மீளவும் கூட்டப்பெற்று இணைப்பு முயற்சிகள் தொடர்வதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும். அவ்வேளை இரு சபைகளும் செயல்திட்ட ஊக்கம், ஆர்வலர் பங்களிப்பு, பெறப்பட்ட நிதி யுதவி, முதலீட்டுத் திட்டத்துக்கான நன்கொடைகள் பற்றி ஆலோசிக்கும்.

இரு வைத்தியசாலைகளினதும் சபைகள் இணைவதைப் பரிந்துரைக்கும் பட்சத்தில், மைய கிழக்கு LHIN சபையும் சுகாதாரம் மற்றும் நெடுநாள் பராமரிப்பு அமைச்சரும் இணையும் விடயத்தைப் பரிசீலனை செய்வர்.

இரு வைத்தியசாலைகளும் 2013 மார்ச் 27ல் தொடங்கப்பெற்ற இணைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆர்வலர்கள் அனைவருக்கும் அறிவித்து அவர்களைத் தொடர்ந்து இம்முயற்சியில் ஈடுபடுத்துவதற்குத் தம்மை அர்ப்பணித்துள்ளன.

இணைக்கப்பட்ட வைத்தியசாலைக் கூட்டுத்தாபனத்தின் நன்மைகளாவன:

- மேம்பட்ட சுகாதாரக் கவனிப்பும் மேம்பட்ட தரமும். இதன் பொருளாவது:

    - ஸ்காபரோவிலும் மேற்கு டுறாமிலும் அதிக சிகிச்சை நிபுணத்துவம் கிடைத்தல்.
    - எமது சமூகத்துக்கு வெளியே சிகிச்சைபெற்றுவரும் நோயாளிகளை உள்ளக வைத்தியசாலைகளுக்கு இடம் மாற்றுதல்.
    - வைத்தியசாலையின் நான்கு வளாகங்கள் வாயிலாகவும் சிறந்த பராமரிப்பை வழங்குவதற்காக மேலதிக மருத்துவ நிபுணர்களைப் பெறுதல்.
    - வைத்தியசாலைகள் மத்தியிலும் சமூகசேவையாளர் மற்றும் பராமரிப்பு நிலையங்களுடனும் மேம்பட்ட தொடர்பாக் கங்களையும் சேவைப் பரிமாற்றங்களையும் செய்தல்.
    - அதிக சிறப்புச்சேவை நிலையங்களையும் வருங்காலப் பிராந்திய சேவைத் திட்டங்களையும் உருவாக்குதல்.
    - நாளாந்தக் கவனிப்புகளுக்குரிய நடமாடும் சிகிச்சை நிலையங்களை நிறுவுதல்.

- இணைவதால் ஏற்படும் நன்மைகளை ஒரு நீண்ட காலப்போக்கில் உணரலாம். அப்பொழுது வைத்தியசாலைகள் சமூகங்களுக்குச்

சிறப்பாகச் சேவை செய்யத்தக்க நிலைமையில் இருக்கும்; ஒரு மாற்றம்பெற்ற சுகாதார சேவைக்கான முறையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உருவாக்கும்; நிதிச் சவால்களை ஒன்றாகச் சமாளிக்கும்; வேகமாக மாறிவரும் சுகாதார சேவைச் சூழலைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தும்.

- புதிய வைத்தியசாலைக் கூட்டுத்தாபனம் அதிக நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கும். மாகாணத்தின் நோயாளர் அடிப்படையில் வழங்கப்படும் நிதித் திட்டத்தை நன்கு பயன்படுத்தும் நிலையில் இருக்கும். சிறந்துவரும் தகைமையிலும் திறத்திலும் அதிக கவனம் செலுத்தும்.

-30-

றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) ஓர் அதிசிறந்த தீவிர கவனிப்புச் சமூக வைத்தியசாலையாகும். 24/7/365 அவசர சேவை, மகப்பேற்று மருத்துவம், குழந்தை மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மனநல வைத்தியம், பிராந்திய இருதய வைத்தியம் போன்ற சேவைகளை உள்ளடக்கிய பல திட்டங்களை அது கொண்டிருக்கும்.

றூஷ்வலி இரண்டு சமூக வைத்திய வளாகங்களான ஸ்காபரோ சென்ரினறி வைத்தியசாலை, மேற்கு றூறாமில் உள்ள ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங் வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல சுகாதார நிலையங்களைக் கொண்டுள்ளது.

கனடாவில் அதிகம் பன்முகப்பட்ட மக்கள் வாழும் பகுதி ஒன்றில் அமைந்துள்ள ஸ்காபரோ வைத்தியசாலை(TSH) தனது இரண்டு வளாகங்கள் (பேச்மவுண்ட் வளாகம்/பொது வளாகம்) வாயிலாகவும் அவற்றைச் சூழ்ந்துள்ள ஆறு கிளை நிலையங்கள் வாயிலாகவும் நோயாளர் முதன்மைசார் கருணைச் சேவையை வழங்குகின்றது.

TSH ஒரு பிரதேச இரத்த மாற்று நிலையமாகும். அத்துடன் மனநோய் வைத்தியம், எலும்புச் சிகிச்சை, குழந்தை வைத்தியம், நெடுங்கால நோய்களைத் தடுத்தல், புற்றுநோய் மருத்துவம் போன்றவற்றுக்கு அது பெயர் பெற்றது.

ரோறன்ரோ பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள TSH குருதிக் குழாய் அறுவைச் சிகிச்சை, இதயத்துடிப்புச் சீராக்கம், கண்சிகிச்சை போன்றவற்றுக்குப் பிற வைத்தியசாலைகளிலிருந்து நோயாளர் அனுப்பப்படும் நிலையமாகவும் விளங்குகின்றது.

ஊடகத் தொடர்பு:
David Brazeau
Director, Public Affairs, Community Relations and Telecommunications,
Rouge Valley Health System
647-294-8885 dbrazeau@rougevalley.ca;

Holly-Ann Campbell
Director, Communications and Engagement
The Scarborough Hospital,
416-438-2911, ext. 8308 hocampbell@tsh.to